**வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ட் எக்றோ என்டபிறைசஸ் (தனியார்) கம்பனி - 2016**

---

வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ட் எக்றோ என்டபிறைசஸ் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள் மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் ஸ்தாபிப்பு

1999 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட இலங்கை மகாவலி அதிகாரசபையின் லைவ்ஸ்ரொக் டெவளப்மென் பிரிவு, 1999 யூன் 10 இல் 'வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ட் எக்றோ என்டபிறைசஸ் (தனியார்) கம்பனி' என்ற பெயரையுடைய அரச கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்பட்டிருந்தது. 2012 செப்தம்பர் 12 இல் இந்த கம்பனியினை கலைப்பதற்கு மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும், அதனைத் தொடர்ந்து, 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2013 நவம்பர் 20 இல் பிவி 22402 ஆம் இலக்கத்தின் கீழ் கம்பனியொன்றாக அது மீள பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட லைவ்ஸ்ரொக் என்ட் எக்றோ என்டபிறைசஸ் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு – நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அத்தியாயம் 3 இன் 8 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் தொடர்ந்து செல்லும் தன்மை மீதான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அத்தியாயம் 33 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியுடன் தொடர்புபட்ட தரப்பினர்கள் மீதான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளரொருவருக்கு கம்பனி நிதியத்திலிருந்து 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்ட ரூபா 1,242,000 தொகையான சம்பளங்கள், அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொங்கல் கணக்கொன்றிக்கு ரூபா 35,682,485 தொகையான இனங்காணப்படாத உள்ளக பண்ணை கடன்பட்டோர்களின் மீதிகளின் பெறுமதியினை பதிவதன் மூலம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் சமப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.3 விபரிக்கப்படாத வித்தியாசங்கள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 88,183,837 தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம், அந்தப் பெறுமதி ரூபா 88,094,019 தொகையாகக் காணப்பட்டமையினால், ரூபா 89,818 வித்தியாசமொன்றினை சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| மகாவலி பொருளாதார முகவர் | 405,218,731 | உறுதிப்படுத்தலுடன் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் மூலதன மானியமாக கணக்குக்கு கொண்டுவரப்பட்ட இந்த பெறுமதிகளின் கணக்கீடு |
| கொத்மல பால் அபிவிருத்தி நிதியம் | 2,900,000 | |
| ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியங்கள் | 3,583,706 | |
| வெளிநாட்டு உதவி | 5,729,782 | |
| நிலையான சொத்துக்களின் பதிவழிப்பு | 859,256 | பெறுமதி தயாரிக்கப்பட்ட வழி மற்றும் தொடர்புடைய அங்கீகாரம் |
| பெறவேண்டிய கணக்குகள் - வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ட் எக்றோ என்டபிரைசஸ் (தனியார்) கம்பனி | 1,382,468 | பெறுமதி உறுதிப்படுத்தலுடன் தொடர்புடைய ஆவணங்கள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கல் முகாமைத்துவ அமைச்சிற்கு மாற்றப்பட்ட நுவரெலிய பண்ணையின் கால்நடைக்கு பெறவேண்டிய ரூபா 5,820,430 தொகை, பெறவேண்டிய கணக்குகளாகக் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான 05 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு மேற்பட்ட காலம்கடந்த ரூபா 690,784 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்ப்பனவுசெய்யப்பட்டிருக்காததுடன் அந்த மீதிகளின் உறுதிப்படுத்தலுடன் தொடர்புடைய சான்றுகள் கம்பனியில் காணப்படவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டம் | |
| (i) 39(i) ஆம் பிரிவு | அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க சில அரச பணிப்பாளர்களையும் மற்றும் பங்குதாரர் பணிப்பாளர்களினையும் உள்ளடக்கி கம்பனியின் பணிப்பாளர் சபை 07 நபர்களினை கொண்டிருக்க வேண்டிய போதிலும், கம்பனியின் பணிப்பாளர் சபை மூன்று நபர்களினை மாத்திரம் கொண்டிருந்தது. |
| (ii) 45(i) ஆம் பிரிவு | கம்பனியின் தலைவராக இருப்பதற்கு ஏதாவது ஒரு பணிப்பாளரை பணிப்பாளர் சபை தெரிவு செய்யலாம். இருப்பினும், 2015 செப்தம்பரிலிருந்து கம்பனிக்கு தலைவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டிறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 1,043,943 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 4,025,739 ஆன பற்றாக்குறையொன்றினை விளைத்திதிருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 5,069,682 ஆன பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முக்கிய செயற்பாடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 3,662,109 இனால் குறைவடைந்தமை மற்றும் ரூபா 1,407,573 இனால் செலவினம் அதிகரித்தமை காரணமாக நிதிசார் விளைவு பற்றாக்குறையுடையதாகக் காணப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்கையில், 2012 ஆம் ஆண்டில் ரூபா 16,603,787 தொகையாகக் காணப்பட்ட கம்பனியின் தேறிய இலாபம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 4,025,739 ஆன தேறிய நட்டமொன்றாக மாற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களின் ஊதியம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் நிதிசார் விளைவுக்களுக்கான வருமான வரி என்பனவற்றை மீள சரிப்படுத்திய பின்னர், 2012 ஆம் ஆண்டில் ரூபா 30,769,604 ஆகக் காணப்பட்ட கம்பனியின் பங்களிப்பு தொடர்ச்சியாகக் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 7,782,072 ஆகக் காணப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி பண்ணையின் வியாபாரத்தினை நடாத்துதல், மொத்த மற்றும் சில்லறை விற்பனைக்கு கோழி பண்ணை வளர்ப்பு, விவசாயிகளுக்கான கோழித் தீனியின் உற்பத்தி மற்றும் விநியோகம், கால்நடை, பன்றிகள், கோழிகள் ஏனையவை போன்ற விலங்கினங்களின் இனப்பெருக்கம், விற்பனை மேம்படுத்தல், தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி, பழங்கள் மற்றும் தானியங்களுடன் தொடர்புடைய வியாபார செயற்பாடுகளினை நடாத்திச் செல்லுதல் போன்ற நோக்கங்கள் கம்பனியின் அமைப்பு அகவிதியின் 12 பிரதான நோக்கங்களாக உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அவை அடையப்பட்டிருக்காததுடன் சிறிய அளவொன்றிலான எருமை, கறவை மாடுகள், கோழிகள், பன்றிகள் மற்றும் வெள்ளாடு வளர்ப்பு மாத்திரமும் பால் உற்பத்திகளின் செயற்பாடுகளும் செயற்பட்டிருந்தன.

(ஆ) பெறுகைகள் செயற்பாடுகளிலிருந்து விலகி மீளாய்வாண்டில் ரூபா 8,407,159 பெறுமதியான கோழித் தீனியும் ரூபா 2,278,000 பெறுமதியான 19,000 கோழிக் குஞ்சுகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கோழிக் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையினால், ரூபா 70 தொடக்கம் ரூபா 155 வரையான வீச்சில் கோழிக் குஞ்சொன்றின் விலை வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிரதுருக்கோட்டை பண்ணை அமைந்துள்ள, 1986 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறு பால்பண்ணையின் வடிகால் முறைமையின் கோளாறு மற்றும் உள்ளக சுத்திகரிப்பு முறைமையில் பலவீனங்கள், கூரையின் பலவீனமான நிலைமை மற்றும் தொழிற்சாலைக்குள் நீரின் கசிவு, தொழிற்சாலைக் கட்டிடங்களின் பழைய நிலைமை, ஆரம்பத்திலிருந்து இயந்திரம் பயன்படுத்தப்பட்டதன் மூலம் உற்பத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக சுகாதாரப் பிரச்சினைகள் எழுந்தன. அவ்வாறான சாதகமற்ற நிலைமைகளில் உற்பத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக சட்ட பிரச்சனைகள் எழக்கூடியமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த நிலைமைகளில் தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை முறையே ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டியவை ரூபா 8,237,607 மற்றும் ரூபா 334,846 தொகைகளாகக் காணப்பட்டது. ஆகையினால், எதிர்காலத்தில் கம்பனி மிகைக் கட்டணமொன்றினை செலுத்தவேண்டியேற்படலாம் என அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ்க் காட்டப்பட்ட ரூபா 14,929,159 பெறுமதியான நிலங்களின் சட்டரீதியான உரிமைத்துவத்தினை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரச் சட்டத்தின் 42(1) ஆம் பிரிவின் உறுப்புரைகளின் பிரகாரம் ஒவ்வொன்றும் ரூபா 100 ஆன சாதாரண பங்குகளினை கம்பனியின் மூலதனம் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம், ரூபா 10 ஆன 5,000,000 பங்குகளினை அங்கீகரித்த மூலதனம் உள்ளடக்கியிருந்தது. கம்பனியின் ஆரம்பத்தில் தொடக்க பணிப்பாளராக இருந்த மற்றுமொரு தனியார் கம்பனியின் மூன்று பணிப்பாளருக்கு 03 பங்குகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 வரையிலும் ஏனைய பங்குகள் விநியோகிக்கப்பட்டிருக்காததுடன் மகாவலி அதிகாரசபையின் உரிமைத்துவத்திற்கு கம்பனியின் எவ்வித பங்குகளும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், கம்பனி தொடர்பில் அதிகாரசபையின் உரிமைத்துவத்தின் மீது கேள்விக்குரிய நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை மகாவலி அதிகாரசபை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இந்த கம்பனி முழுமையான உரிமைத்துவத்துடன் அதிகாரசபையின் துணைக் கம்பனியொன்றாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தவேளை 1999 ஆம் ஆண்டில், இந்த கம்பனியில் ரூபா 418,871,277 தொகையொன்று முதலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதிவரையேனும் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு அவற்றின்மீது எவ்விதமான பலன்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கம்பனி ஆரம்பிக்கப்பட்ட 1999 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரியின் சேகரிப்பு மற்றும் செலுத்துகை, இலங்கை மகாவலி அதிகாரசபையின் கால்நடை அபிவிருத்தி பிரிவின் பெயரில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

1999 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியின் கீழ் 07 பண்ணைகள் செயற்பட்டிருந்த போதிலும், கம்பனியின் வரம்பின் கீழ் தம்மின்ன மற்றும் கிரதுருக்கோட்டையில் அமைந்துள்ள இரண்டு பண்ணைகள் மாத்திரம் தற்போது காணப்படுகின்றன. ஏனைய பண்ணைகள் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 16,806,745 மற்றும் ரூபா 6,583,340 பெறுமதியான முறையே கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் மற்றும் அந்த பண்ணைகளுக்குச் சொந்தமான ஏனைய சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் மேலும் காட்டப்பட்டிருந்தது. வெளித்தரப்பினர்களுக்கு பண்ணைகளினை வழங்குவதற்கு பெறப்பட்ட அங்கீகாரம் கூட கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு தவறப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014/2015 ஆம் ஆண்டில் ரூபா 12,501,900 தொகையொன்றினை செலவழிப்பதன் மூலம் கால்நடை கொட்டாரங்கள் மற்றும் வெள்ளாடு கொட்டாரங்களின் நிர்மானிப்புக்களினை உள்ளடங்கியிருந்ததுடன் கம்பனிக்குச் சொந்தமான கிரதுருக்கோட்டை பண்ணைக்குச் சொந்தமான பண்ணையினை மகாவலி அதிகாரசபையின் ‘‘இ’’ முறைமையின் மூலம் விலங்கு வளர்ப்பு பயிற்சி நிலையமொன்றாக மற்றும் நோக்குடன் 2016 பெப்ரவரி 08 இல் ரூபா 8,967,600 பெறுமதியான பொருட்கள் பெறுமதியிடப்பட்டிருந்ததுடன் இந்தக் கம்பனிக்கு அளிக்கப்பட்டிருந்தது. மற்றுமொரு தரப்பினரின் நோக்கமொன்றினை அடைவதற்கு இந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கம்பனிக்கு அளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிர்மாணங்களினை மேற்கொள்கையில் பயன்பாட்டிற்கு குறித்துரைக்கப்பட்ட திட்டமொன்று அல்லது முறைமை கம்பனியில்

காணப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் அந்த சொத்துத் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றதுடன், வழங்கப்பட்ட திகதியிலிருந்து அழிவுக்குள்ளாக்கப்பட்டு கொண்டிருக்கின்றது.

(ஆ) கிரதுருக்கோட்டையில் அமைந்துள்ள அண்ணளவாக 1,054 ஏக்கர் நிலப்பரப்பான விவசாய நிலத்தில் எவ்விதப் பயிர்களும் பயிரிடப்பட்டிருக்காததுடன் சிறிய அளவொன்றில் பிராணி வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால், நிலம் தொடர்ந்தும் குறைப்பயன்பாடுடையதாகக் காணப்பட்டது. மேலும், 2013 ஆம் ஆண்டிலிருந்து சிறிய பால்பண்ணையில் ரூபா 2,720,000 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 2,056,000 கிரயமான 06 அழிவடைந்த மோட்டர் வாகனங்கள் மற்றும் இயந்திரமொன்று கிரதுருக்கோட்டைப் பண்ணையின் அலுவலக வளாகத்தில் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

கம்பனிக்கு சொந்தமான நிரவிய பண்ணை வரிசை அமைச்சின் கீழ் எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த பண்ணைக்கு இணைக்கப்பட்டிருந்த கம்பனியின் 06 ஊழியர்களின் சம்பளங்கள், ஊழிய சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி அமைச்சினால் மற்றும் தற்போதைய மகாவலி அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த ஊழியர்களினை முறையாக விடுவிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனி ஸ்தாபிப்பின் நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு எதிர்கால திட்டங்களினை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டில் செயற்பாடுகளின் முறையான செயலாற்றுக்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கு தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தகவல்களுக்கிடையே 14 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| ------------------------------------------ | | ------------------------------ |
| (அ) | கணக்கீடு | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களினை தயாரிக்க தவறியமை. |
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுபாடு | நீண்ட காலப்பகுதியொன்றுக்கு தீர்ப்பனவு செய்யப்படாத தொடர்ந்தும் காணப்படுகின்ற மீதிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | கம்பனிக்கு சொந்தமான மனித வளங்கல்களினை வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கையில் முறையற்ற முகாமைத்துவம் |
| (ஈ) | செயலாற்றல் | அமைப்பு அகவிதியில் குறிப்பிடப்பட்ட அனைத்து நோக்கங்களினையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (உ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | ஏனைய தரப்பினர்களுக்கு சொந்தமான சொத்துக்களினை மற்றும் விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்களினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |